[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2023 மார்ச் 20

கல்லூரிகளில் சேர்ந்திருப்பது இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

58. 1989 ஆம் ஆண்டில் நாட்டுக்கே முன்னோடியாக, தருமபுரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, இன்று ஒரு மகத்தான மக்கள் இயக்கமாகத் திகழ்கிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் திறன் மேம்பாட்டிற்கும் வாழ்வாதார வளர்ச்சிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இவ்வாண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, இதுவரை, சுமார் 24,712 கோடி ரூபாய்க்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வரும் நிதியாண்டில், 30,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

59. பெண் தொழில் முனைவோர்கள், தேவையான கடன்களை உரிய நேரத்தில் பெறுவதிலும், பொருட்களை சந்தைப்படுத்துவதிலும், தொடர்ந்து இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர். இச்சவால்களை எதிர்கொள்ள, பெண்களுக்கென சிறப்பு 'புத்தொழில் இயக்கம்' ஒன்றை அரசு தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் தொழில்முனைவோர், புத்தொழில்களைத் தொடங்குவதற்கு அனைத்து வகையிலும் இந்த இயக்கம் உதவும்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

60. தானிய சேமிப்புக் கொள்ளளவை அதிகரித்து, இழப்பினைக் குறைப்பதற்காக, 2021–2022 ஆம் ஆண்டு முதல் 238 கோடி ரூபாய் செலவில் 2.86 இலட்சம் மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவுடன் 213 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 28,000 மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட 12 கிடங்குகள் 54 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

61. இந்த அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கிய வாக்குறுதிகளான விவசாயக் கடன் தள்ளுபடிக்கு 2,393 கோடி ரூபாயும், நகைக்கடன் தள்ளுபடிக்கு 1,000 கோடி ரூபாயும், சுய உதவிக் குழு கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு 600 கோடி ரூபாயும் என மொத்தம் 3,993 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)